கட்டிட உரிம ஒப்புதல் அளித்தல் Building Permission

ஊராட்சி நிர்வாக அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திருமதி.சசிகலா நடராஜன்

ந.க.எண்.7

தேதி: 14.07.2010

பொருள் : கட்டிட உரிம அனுமதி – வைப்பூர் ஊராட்சி குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் (இ) படப்பை – H.I.E.T பாலிடெக்னிக் கல்லூரி கட்டிட உரிம ஒப்புதல் அளித்தல் – உத்திரவு வழங்குதல் தொடர்பாக:

பார்வை : விண்ணப்ப நாள்: 22-04-2009 அரசாணை எண்: 255வ.அன்ற நாள் 18.08.97

********** **********

ஆணை :

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த, வைப்பூர் ஊராட்சியில், வெள்ளேரிதாங்கல் கிராமத்தில், சர்வே எண்கள்.43/3ஏ2, 3ஃ2, 53/4, 7, 60/1,2,3. மற்றும் பலவற்றில் 16.85 ஏக்கர் பரப்பளவில், 12377.69 ச.மீ பரப்பளவு இடத்தில் M/S Hindustan Institute of Engineering Technology, பாலிடெக்னிக் கல்லூரி கட்டிடம் கட்ட, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் அவர்களால் வழங்கப்பட்ட தொவ/நஊதுஇ (செம்) எண்.33 அ முதல் ஒள் வரை, அ.அ.ஆ.ஆ/2009 –ன் படி, ஊராட்சியின் ந.க.எண்: 7, நாள் : 14.07.2010 –ன் படி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. 1997–ம் ஆண்டு கட்டிட விதிகளின்படி கட்டிடத்தின் முன்புறமும் பின்புறமும் இருபக்கங்களிலும் திறவிடம் விடப்பட வேண்டும்.
2. இவ்வாணை தமிழ்நாடு 1997–ம் ஆண்டு கட்டிட விதிகளில் கூறப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கும் உட்பட்டது.
3. அரசு மற்றும் தனியார் நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது.
4. நிலம் கட்டிடத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடங்கள் மற்றும் உத்திரவுகள் கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கும் போது எந்நேரமும் ஆய்வு செய்யும் வண்ணம் வேலை நடைபெறும் இடத்தில் வைக்கப்பட வேண்டும்.
5. அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லையென்றால். இவ்வுத்தரவு காலம் புதுப்பிக்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடங்களில் மாறுதல் ஏதேனும் செய்ய வேண்டியிருந்தால் அதற்கான முன் அனுமதி பெறவேண்டும்.
7. இவ்வாணை மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களின் மூலம் விதிமுறைகளை பின்பற்றுவதில் மனுதாரர் ஏதும் உரிமை கொண்டாட முடியாது
8. இவ்வலுவலகத்திலிருந்து முடிவு அறிக்கை பெறாமல் கட்டிடத்தில் குடிபுகக் கூடாது.
9. கழிவு நீர் அனைத்தும் வீட்டின் சுற்று சுவருக்குள்ளேயே பூமியல் உறிஞ்சப்படும் வகையில் கட்டப்பட வேண்டும்
10. புதிய கட்டிடங்களையும் அதன் சுற்றுப்புறங்களையும் மற்றவர்களுக்கு தொந்தரவு ஏற்படா வண்ணம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
11. எந்த உபயோகத்திற்கு கட்ட அனுமதி பெறப்பட்டதோ அந்த உபயோகத்திற்க்கு மட்டும் கட்டிடம் பயன்படுத்த வேண்டும்.
12. கட்டிடம் முடிவுற்றவுடன் முடிவுற்ற விபரம் ஊராட்சிக்கு தெரிவிக்க வேண்டும்.
13. நில உரிமை தொடர்பாகவோ (அ) வேறு விதத்திலோ ஏதேனும் பிரச்சனை இருப்பின் இது குறித்து ஆக்கிரமிப்பை அகற்றுதல் மற்றும் நீதிமன்றம் தொடர்பான நடவடிக்கைகள் இவ்வாணையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.
14. விண்ணப்பதாரர் தவறான ஆவணங்கள் மற்றும் தகவல்களை கொடுத்து ஒப்புதல் பெற்றால் இவ்வாணை மாற்றப்படவோ (அ) ரத்து செய்யப்படலாம்.
15. இவ்வாணை அளிக்கப்படும் நாளிலிருந்து ஒராண்டு காலத்திற்குள் செல்லத்தக்கது.

இணைப்பு: வரைபட தொகுப்பு அசல்

பெறுநர்: மெசர்ஸ் இந்துஸ்தான் இன்ஸ்டியூட் ஆஃப்
எஞ்சினியரிங் டெக்னாலஜி (H.I.E.T), எண்.40,
ஜி.எஸ்.டி ரோடு, புனித தோமையர் மலை, செ –16

நகல் : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள்,
செங்கல்பட்டு

Correspondent
HINDUSTAN INTERNATIONAL SCHOOL
Navalur Road, Vellarithangal,
Serapanancheri, Padappai
Kanchipuram - 601 301.

PRINCIPAL
[HIND]USTAN INTERNATIONAL SCHOOL-CBSE
PADAPPAI - 601 301.